தமிழ் உலகு

(ஞாயிற்றுக்கிழமைதோறும் வெளிவரும் ஓர் தமிழ்ப்பத்திரிகை.)

S. பட்டாபிராமன், M. A., பத்திராதிபர்.

தொ. 1. | துந்துபி௵ ஆடி௴ 29௳ (13-8-'22.) | ப. 16.

விஷய அடக்கம்.

1. வர்த்தமானம் 141
2. ஆகிலும் பாதகமில்லை 143
3. நமது கடமை 143
4. வேதத்திலும்சொல்லப்பட்டிருக்கின்றது! 143
5. பாபு சித்தரஞ்சன் தாஸ். 144
6. என்ன விபரீதத்திற்காகவோ? 144
7. விச்வபாரதி. 145
8. ஒருபாஷையின் சக்தி... ... 145
9. சோதிடப்புலி சோணாசலம் ... 146
(ஸ்ரீமான் ராமசந்திரர் எழுதியது)
10. இரண்டு கிழவர்கள் 147
(ஸ்ரீமான்V. நாராயணய்யர் M.A.M.L.எழுதியது)

தபால் கூலியுள்பட சந்தா

ஒரு வருஷத்திற்கு ரூ. **5—0—0**

அரை வருஷத்திற்கு ரூ. **3—0—0**

வெளி நாடு

ஒரு வருஷத்திற்கு **6—0—0**

'தமிழ் உலகு' காரியாலயம்

16, பசுபதி அக்கிரஹாரம்,

மைலாப்பூர், சென்னை.

பல நண்பர்கள் வேண்டுகோளின்படி, இந்த வாரம் முதல் 'தமிழ் உலகு' ஞாயிற்றுக்கிழமை தோறும் வெளிவரும்.

வர்த்தமானம்

சென்றவாரத்தில் பம்பாய் சட்ட சபையில், தேசிய ஊழியத்திற்காக ஜெயிலுக்குப் போயிருப்போரை ஜெயிலில் மற்ற கைதிகளை நடத்துவது போல் நடத்தக் கூடாதென்றும், இங்கிலாந்தில் 'முதல் தரக் குற்றவாளிகள்' என்று சொல்லப் பட்டவர்களுக்கு என்னென்ன சௌகரியங்கள் கொடுக்கப்படுகின்றனவோ அவைகளெல்லாம் பிறருக்கோ, பிறர் சொத்துக்களுக்கோ தீங்கு செய்யாமல் அரசாங்கத்தை மீறி நடந்ததற்காக மட்டும் ஜெயிலுக்குப் போயிருப்பவர்களுக்கும் கொடுக்கப்படவேண்டும் என்ற ஒரு தீர்மானம் கைக்கொள்ளப்பட்டது. இது விஷயத்தில் பம்பாயில் பிரசுரமாகும் "டைம்ஸ் அப் இண்டியா" பத்திரிகை, படிப்பும் யோக்கியதையும் வாய்ந்து தேசபக்தியினாலேயே அரசாங்கத்தையெதிர்க்கும் மனிதர்களைத் திருட்டு முதலான குற்றங்களைச் செய்யும் அதமர்களைப்போல் நடத்துவது தகாதென்று அபிப்பிராயப்படுகிறது.

அலஹாபாதில் பிரசுரமாகும் 'லீடர்' பத்திரிகை தன்னுடைய பிரதிநிதி ஒருவர் டாக்டர் தேஜ் பகதூர் ஸாப்ரூவைக்கண்டு விசாரித்ததில், ரௌலெட் சட்டத்தைவிட இன்னுங்கடூரமான சட்டங்கள் கூடிய சீக்கிரத்தில் இந்திய கவர்மெண்டாரால் நிறைவேற்றப்படும் என்று சிலநாளாக இருந்தவதந்தி முற்றிலும் தவறு என்றும், அம்மாதிரி சட்டம் ஒன்றும் ஏற்படப்போகிறதில்லை என்றுமறிகின்றது.

அதேபத்திரிகை, பண்டிட் மாளவியா சீக்கிரத்தில் 'அரெஸ்டு' செய்யப்படுவார் என்று உலவிவரும் வதந்திக்கும் ஆதாரமில்லை என்று சொல்லுகிறது.

"காங்கிரஸ்" என்னும் பத்திரிகைக்குப் பத்திராதிபராகயிருந்துவந்த மௌலானா ஸிதிக், செக்ஷன் 124-A I. P. C.யின் கீழ், 18மாதம் கடுங்காவலி லிடப்பட்டார்.

பம்பாய் நகரத்தின் வர்த்தகப்பிரபுக்களில் ஒருவரும், இந்தியன் லெஜிஸ்லேடிவ் அஸெம்பிளியின் அங்கத்தினருமான ஸர். விதல்தாஸ் தாக்கர்ஸே அந்த சபையில் தனது ஸ்தானத்தை ராஜிநாமா செய்துவிட்டார். சில மாதங்களுக்குமுன் அச்சபையில் ஏற்பட்ட "ஜனங்களின் கக்ஷி" (Democratic Party) யில் இவர் ஒரு முக்கிய ஸ்தானம் வகித்திருந்தபடியால், இவர் ராஜிநாமா கொடுத்ததின் காரணத்தைப்பற்றிப் பலவிதமாக ஊகிக்க இடமுண்டு.

பம்பாய் ராஜதானியிலிருக்கும் கொலாபா பிரதேசத்துக் காங்கிரஸ் சபையார், பள்ளிக்கூடங்கள், நியாயஸ்தலங்கள், சட்டசபைகள், இவைகளை பஹிஷ்காரம்செய்வது அனுசிதம் என்று தீர்மானித்தார்கள்.

சென்றவாரம் ஆங்கில I. C. S. உத்தியோகஸ்தர்களின் பிற்கால நிலைமையைப்பற்றிப் பார்லிமெண்டில் ஒரு முக்கியமான விவாதம் நடந்தது. ஸர். ஸாம்வல் ஹோர் என்பவர் ஆங்கில உத்தியோகஸ்தர்கள் சீர்திருத்தச் சட்டத்தால் ஏற்பட்ட நிலைமையில், இந்தியாவில் உத்தியோகம் செய்வது கஷ்டமென்றும், இந்தியர் பெரும்பாலரும் ஆங்கில உத்தியோகஸ்தர்களிடத்தில் அருவையுடனும், அன்பில்லாமலு மிருப்பதால், அந்த உத்தியோகஸ்தர்கள் தங்களுடைய உபகாரச்சம்பளம் முதலியவைகள் கூடத்தப்புமோ தப்பாதோ என்று பயந்து தத்தளிப்பதாக எடுத்துச் சொன்னார். அதற்கு Mr. லாயிட் ஜார்ஜ் கொடுத்த பதிலிலிருந்து சீர்திருத்தச் சட்டத்தில் பூர்ண நம்பிக்கை வைத்திருந்தவர்கள் கூடக்கலங்கும் படியாக விருக்கின்றது. சீர்திருத்தச்சட்டத்தின் கருத்து, இந்தியாவுக்கு, ஆஸ்ட்ரேலியா, கனடா முதலான தேசங்களுக்குள்ளதுபோல், சுயராஜ்யம் நாளடைவில் கொடுக்கவேண்டுமென்றும், அந்த சுயராஜ்யத்திற்கு 1919 வருஷம் ஏற்பட்ட சட்டம் அஸ்திவாரம் போலும் என்பதே. ஆனால் பிரிடிஷ் முக்கிய மந்திரி இப்பொழுது என்ன சொல்லுகிறார்? "சீர்திருத்தச் சட்டம் ஒரு பரீக்ஷை (Experiment) தான்; அது பலித்தால் பலிக்கலாம், பலிக்காமற் போனாலும் போகலாம். மேல் நாட்டு அரசாங்க வழியும் இந்தியாவுக்குப் பொருந்துமோ பொருந்தாதோ பார்க்கவேணும். ஆனால் இது எப்படியிருந்தாலும், இந்தியாவில் நல்ல அரசு செலுத்தவேண்டுமென்ற பெருங்கடமையை, அத்தேசத்தை நாமடைந்த நாளாக வகித்து வருகின்றோம், அதிலிருந்து நம்மை நாமிப்பொழுது விலக்கிக்கொள்ள முடியாது; நாமதை ஒரு நாளும் யத்தனிக்கப்போகிறதுமில்லை. நாமும் நம் சந்ததிகளும், புத்திரபௌத்திர பாரம்பரியமாய், இந்தியாவின் பொறுப்பை ஏற்றும், அதற்கு சரியான வழியைக்காட்டியும், அதில் சட்டத்தையும் அரசாங்கத்தையும் நிலைநிறுத்தியும், அதன் ஜனங்களை வெளியிலிருந்தும் உள்ளே யிருந்தும் தாக்கும் சத்துருக்களிலிருந்து ரக்ஷித்தும், அரசு செலுத்தி வரவேண்டும்; இத்தகைய மேன்மையும் சிரமமும் வாய்ந்த பொறுப்பை இவ்வளவு நாள் வகித்துவந்த ஆங்கில I. C. S. உத்தியோகஸ்தர்களை நாம் ஒருநாளும் கைவிடமாட்டோம். அவர்களுடைய சௌகரியங்களுக்கும் அந்தஸ்துக்கும் ஒருவிதக்குறைவும் வராமல் பார்ப்பது நமது முதற்கடமை," என்று விரித்துச் சொன்னார்.

இவ்வளவிலும், இந்தியாவுக்கு சுயாட்சி நாளடைவில் கொடுப்போம் என்று 1917 ௵ ஆகஸ்டு மாதம் 20௳ ஏற்பட்ட வாக்குத் தத்தத்தை முற்றிலும் மறந்து விட்டார். இதை இந்தியாவின் மித்திரனான கர்னல் வெஜ்வுட், மிஸ்டர் லாயிட் ஜார்ஜ் பேசிமுடித்த பிறகு, எடுத்துக்காட்டினதுமன்றியில், இந்தியாவுக்காகத்தான் ஐ. ஸி. எஸ். ஏற்பட்டதே யொழிய, ஐ. ஸி. எஸ்க்காக இந்தியா ஏற்படவில்லை, ஐ. ஸி எஸ். காரர்கள் முன்னிருந்ததுபோல மஹோன்னத ஸ்திதியிலேயே எக்காலமும் இருக்கவேண்டுமென்றால், இந்தியாவுக்கு சுயாட்சி எப்பொழுது கிடைக்கப் போகிறது என்று கேட்டார். உடனே இந்தியா உதவி மந்திரியாயிருக்கும் விண்டர்டன் பிரபு எழுந்திருந்து, கர்னல் வெஜ்வுட் இந்தியாவிலிருந்து ஆங்கில ஆட்சியை ஒழிக்கக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார் போலிருக்கிறதென்றும், இந்தியாவுக்கு சுயராஜ்யம் கொடுப்பதாகச் சொன்னதை யிப்பொழுது Mr. லாயிட்ஜார்ஜ் மறுத்துச் சொல்லிவிடவில்லையென்றும், அந்த சுயாட்சியடைய ஓர் முக்கிய சாதனமான சீர்திருத்தச் சட்டம் அனுஷ்டானத்திலிருப்பதால் சுயாட்சியடைவது இனிமேல் இந்தியர்களின் சாமர்த்தியத்தையே பொருத்ததென்றும் சொன்னார். இப்படி இந்த தர்க்கம் முடிந்தது.

தென்னிந்தியா ரெயில்வேகம்பெனியார் தங்கள் வேலைக்காரார்கள் யாரும், சட்ட சபை அங்கத்தினரிடத்திலும், இன்னும் மற்ற செல்வாக்குள்ளவர்களிடத்திலும், தங்களுடைய குறைகளைச் சொல்லிக்கொள்வது, அவர்கள் மூலமாய் அக்குறைகளை ராஜாங்கத்திற்குத் தெரியப்படுத்த முயலுவது, இவை பிசகு; அவ்விதம் யாராகிலும் செய்வதாக ரயில்வே அதிகாரிகளுக்குத் தெரிந்தால் அவர்கள் மீது கடுமையான சிக்ஷை விதிக்கப்படும் என்று உத்தர விட்டிருக்கிறார்கள்.

டில்லியிலிருக்கும் "டைரெக்டர் அப் இன்பர்மேஷன்" என்ற உத்தியோகஸ்தர் ரயிலில் மூன்றாவது வகுப்பு வண்டிகளில் பிரயாணம் செய்யும் ஜனங்களின் சௌகரியா சௌகரியங்களை அரசாங்கத்தார் கவனிப்பதேயில்லை என்ற ஒரு குறை எங்கு மிருக்கிறது; ஆனால் அப்படி நினைப்பது தவறு என்று பத்திரிகைகளுக்கெழுதியிருக்கிறார். அவருடைய தீர்மானமென்ன வென்றால் அரசாங்கத்தார் அலக்ஷியமாயில்லை, ஆனால் வேண்டிய சௌகரியங்களை உடனே செய்ய இடையூறுகள் பலவிருக்கின்றன என்பதே. நாளுக்கு நாள் மூன்றாம் வகுப்பில் பிரயாணம் செய்பவரின் கூட்டம் அதிகரிக்கிறது; அதற்குச் சரியாக வண்டிகளை ஜாஸ்திப்படுத்துவோ மென்றால், பணமகப்படுவது கஷ்டமென்பதைத்தவிர, அயல் தேசங்களிலிருந்து வண்டிகளுக்கு வேண்டியசாமான்கள் வரவழிக்கவேண்டி யிருப்பதால் தாமதமாகிறது. தவிர ஜாஸ்தி வண்டிகள் உபயோகிப்பதென்றால் அதற்குத்தகுந்தபடி வண்டிகள் மாறி நிற்கபுது "லைன்" களும், அகண்ட ஸ்டேஷன்களும் 'ஓர்க் ஷாப்புகளும்' வேண்டும். இதற்கும் பணம் அவசியம் ஆகையால் எல்லாம் முடிவில் பணம் அகப்படுவதைப் பொருத்திருக்கிறது. ஆயினும், வருகிற 5 வருஷத்திற்கு 30 கோடி ரூபாய் ரயில்வே சீர்திருத்தத்திற்காக திட்டம் போட்டிருப்பதால் மூன்றாம் வகுப்புப் பிரயாணிகளுக்குக் கூடிய மட்டில் சௌகரியங்கள் பண்ணலாமென்று கவர்மெண்டார் உத்தேசிப்பதாக, மேற்கண்ட கடிதத்திலிருந்து தெரியவருகிறது.

மதசம்பந்தமான போதனைகள் லோகல் பண்டு பள்ளிக் கூடங்களில் சிறுபையன்களுக்குக் கற்பிக்கப்படலாமென்று, சென்னைகவர்மெண்டார் உத்தரவு செய்திருக்கிறார்கள். இது விஷயத்தில் சில நிர்ப்பந்தனைகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதில் முக்கியமானவை, எந்தப்பையனுக்கும் தன்னுடைய மதத்தைத்தவிர மதாமதங்களைப் பற்றி போதனைகள் செய்யக் கூடாதென்பதும், மதவிஷயமான படிப்பு ஒருபையனுக்கு சொல்லிக்கொடுப்பதற்கு முன், அவனுடைய தகப்பன் அல்லது கார்டியனுடைய உத்தரவும் வேண்டுமென்பதே.

ஆகிலும் பாதகமில்லை

Rt. Hon. V. S. ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார்.

சில மாதங்களுக்கு முன், இந்தியாவிலிருந்து, Rt. Hon. V. S. ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார், ஆஸ்ட்ரேலியா, காணடா, நியூஸிலண்ட், முதலிய தேசங்களிலுள்ள இந்தியர்களின் நன்மைக்காகவே உழைப்பதற்குச் சென்றிருக்கின்றாரென்பதை நமது அன்பர்கள் அறிவார்கள். ஆஸ்ட்ரேலியாவில் அவர் பேசியவைகளைப்பற்றி எல்லோரும் மிகுதியாகவே அதிருப்தியடைந்து வருகிறார்களானதால், இங்கே அவர் பின்வருமாறு பேசியிருப்பதை நாம் எடுத்தெழுதுகின்றோம்.

"இந்நியூஸிலண்டில் இந்தியர்கள் கொஞ்சம் மரியாதையுடன் நடத்தப்பட்டு வருகின்றார்களாகிலும், இப்பிரிடிஷ் ஏகாதிபத்தியத்திற்குள் இருக்கும் சில தேசங்களில் இந்தியர்களுடைய நிலைமை மிகவும் துக்ககரமாயிருக்கின்றது. முற்றும் நாகரீகமற்றவர்கள்தான் இம்மாதிரியாகப் பிறரையும் தமது நாட்டில் வருத்துவார்கள். பிரிடிஷ் ஆதீனத்தில் இந்தியாவும் வாழவேண்டுமெனில், ஒவ்வொரு பாகத்திலும் வெகுகாலமாகவே தங்கியிருக்கும் இந்தியர்கள் பிரிடிஷ் ஜனங்களைப்போலவும் சரிசமானமாக கவனிக்கப்படுவதும் முக்கியம். ஒருவருக்கொருவர் வித்தியாசங்கள் பாராட்டிவருவதால், தீங்குகள் பல விளைந்தே தீரும், இப்பிரிடிஷ் ஏகாதிபத்தியத்திற்குள் இந்தியாவும் இருந்து வருகையில், இந்தியர்களுக்கும் நன்மைகள் உண்டு. ஆயின், அப்படிப்பட்டதொரு உறவால் அவர்கள் தங்களுடைய மானத்தையே முழுமையும் இழக்க வேண்டுமாகில், பின்பு அப்பந்தத்தை இந்தியர்கள் நிச்சயமாக ஒழித்துவிடுவார்கள். மேலும் வேறு வழிகளிலேயே தமது கஷ்டத்தை அவர்கள் நிவர்த்தித்துக் கொள்ளவும் நேரிடும். இவ்வகண்டமான பிரிடிஷ் ராஜ்யத்தில் நிஷ்பக்ஷபாதத்தையே எல்லோரும் நிலைநாட்ட முயலுவது அவசியம். அப்பொழுதுதான், இப்பிரிடிஷ் ஏகாதிபத்தியமும் ஒற்றுமையுடன் நெடுநாள் நீடித்திருக்கக்கூடும்."

இப்படியும் ஓர் தேசத்துரோகி பேசியிருக்கிறார்! இதற்கு நம்முடைய உபாக்கியானம் தேவையில்லை. விஷயங்கள் எளிதாகவே எல்லோருக்கும் புலப்படும்.

நமது கடமை

இந்தியா கவர்மெண்டார் மகாத்மா காந்தியைச் சிறையிற் பிடித்துவைத்த தினம் முதல், மூன்று மாதங்களுக்கு மேலுமாகிவிட்டது. நாம் அவருக்காக இப்போது என்ன செய்துவிட்டோமென்றும், இனிமேலும் நாம் என்னசெய்யவேண்டுமென்றும் கேட்கப்படலாம். நமக்காகவே இவ்வளவு தூரம் தியாகம் செய்து, இப்பொழுது ஜெயிலில் கிடக்கின்ற அம்மகாபுருஷனையும் நாம் மறந்துவிடுவோமாயின், நமக்கு மீண்டும் மோக்ஷமும் உண்டோ? இந்தியாவின்மீது அவருக்குள்ள பற்றுதலில் ஆயிரத்தில் ஒரு பாகமாவது நம்மிடமும் குடிகொண்டிருக்கவேண்டும். தேசத்தைப் பற்றிய கவலை மனப்பூர்வமாய் நமக்கு இல்லாவிடின், அதில் உபயோகமேயில்லை. கேவலம் வேஷம் போடுவதால் மகாத்மா கீர்த்தியை நாம் கூசாமல் அவமதித்தவர்கள் ஆவோம். இவ்விஷயத்தைப்பற்றி Mr. C. F. ஆண்ட்ரூஸ் "யங் இந்தியா"வில் மிகவும் உருக்கத்துடன் எழுதியிருக்கின்றார். வெளியங்கங்களில் மாத்திரமல்லாமல், ஆத்மார்த்தமாகவும் இந்தியர்களுக்குள் தேசபக்தி பெருகட்டுமென இவர் பிரார்த்திப்பது நமக்கெவ்வித ஆச்சரியத்தையும் உண்டாக்கவில்லை. "கதரை" யணிந்துகொண்டே ஒருவன் மகாத்மா காந்தியின் தத்வோபதேசங்களை முழுமையும் மீறியும் நடக்கக்கூடும்; ஆதலால், இந்தியர்களும் முற்றிலும் அந்தரங்க விசுவாசத்தோடு மகாத்மாவின் ஆணைகளைக் காரியத்திலும் நடத்தாவிட்டால், அவருடைய சிரமமெல்லாம் கடைசியில் வீணாகவே முடியும்."—இவ்வாறு Mr. ஆண்ட்ரூஸ் அபிப்பிராயப்படுவது முற்றும் யுக்தமே.

"தன்னுடைய காரியங்களை எவனும் திரிகரண சுத்தத்துடன் செய்து முடிப்பதே தான் கருதி வரும் தர்மமாகுமென்று மகாத்மா காந்தி வற்புறுத்தியிருக்கின்றார். பம்பாய் கவர்மெண்டார் அவரைக் கைதியாக்கும் தருணத்தில், தன்னைப் பார்ப்பதற்காக நான் ஆமதாபாதுக்கு வரவே வேண்டாமென்றும், மேலும் சிறை வாசத்தைத்தான் ஸமாதியில் கழிக்க எண்ணியிருப்பதாகவும் மகாத்மா காந்தி எனக்கெழுதியதுண்டு. தனது புண்ணிய வசத்தாலேயே தான் ஜெயிலில் தள்ளப்பட்டுக் கிடக்கும் பாக்கியத்தைப் பெற்றதாய் அவர் நினைத்தார். இவ்வுலகத்தின்கண் மகத்தான மதங்களை ஸ்தாபித்திருக்கின்றவர்கள் எல்லோரும் அந்தக்கரண சுத்தியையே முக்கியமாக மதித்திருக்கிறார்கள். தவிரவும் வெளிப்படையான ஆடம்பரங்களெல்லாவற்றையும் அவர்கள் என்றைக்கும் 'பாசாங்குகள்' எனக்கண்டித்ததும் நிஜமே."—இப்படியாக Mr. ஆண்ட்ரூஸ் மேன்மேலும் நிரம்பவும் விஸ்தாரமாயெழுதுகின்றார். மகாத்மா காந்தி நமக்காகவே ஆறுவருஷ காலம் தண்டனையடைந்தபின்பும், நமது தேசபக்தியும் பாசாங்காக முடிந்து விடுமா?

வேதத்திலும் சொல்லப்பட்டிருக்கின்றது!

நமக்குள், எப்பொழுதும் நன்மைகளைச் செய்கின்றவர்களுக்கும், மேலும் தீமைகளையே இழைப்பதில் கண்ணாயிருப்பவர்களுக்கும் வேத வாக்கியங்கள் வெகு சுலபமாகவே ஆதாரமாகக் கிடைத்து வருவதை நாம் பார்த்திருக்கிறோம். இரு கக்ஷிக்காரர்களுக்கும் பேதமின்றி உதவி வருவதால் தான் வேதத்திற்கும் இவ்வளவு பெருமையும் வாய்த்திருக்கின்றது போலும்! கிலாபத் சம்பந்தமாகக் கராச்சியில் சென்றவருஷம் நடந்தேறிய விசாரணையில், Messrs. மகமதலி, ஷௌகதலி, இவர்கள் தங்களுடைய கொள்கைகளுக்கு ஸாதகமாய்க் கொரானிலிருந்து வாக்கியங்களைப் பொழிந்திருப்பது நமதன்பர்களின் ஞாபகத்திலிருக்கலாம். அந்த சமயத்தில் இவ்விருவர்களும் கிலாபத் விஷயமாய் பிரிடிஷாரைத் தாக்கியதும் அவ்வாக்கியங்களைக் கொண்டே. ஆயின் சமீபத்தில் மற்றொரு பண்டிதரும் வேறொரு பாடத்தை அக்கொரானிலிருந்தே கண்டு பிடித்துக் கூறியது மிகவும் விநோதமாயிருக்கின்றது. 'ஸிவில் அண்ட் மிலிடெரி கெஸட்,' என்னும் ஓர் பத்திரிகையில் பின்வருமாறு அவர் எழுதுகின்றார்:—

"சட்டங்களை மறுதலித்தலென்பது 'கொரானு'டைய ஆஞ்ஞைகளுக்கு முற்றிலும் விரோதம். இந்தியா-காங்கிரஸ் கமிட்டியிலும், கிலாபத்கமிட்டியிலும் சட்ட மறுப்பென்றும் விஷயத்தைப் பற்றி மறுபடியும் ஆலோசிக்கத் தொடங்கியிருப்

பது விசனிக்கத்தக்கதுதான். சௌரி சௌராவிலும், பம்பாயிலும் நடந்த கலகங்களில் அவ்வளவு பேர்கள் மடிந்ததற்காக சற்றும் வருத்தப்படாததுமன்றியில், அக்கமிட்டிகளிலிருப்பவர்கள் ஊர் ஊராகச் சென்று சட்டமறுப்பு சம்பந்தமாய் விசாரணையும் செய்யப்போகிறார்கள். *

* * * இதையொட்டியே, பின்வரும் அபிப்பிராயமும், 'கொரானி'ல் காணப்படுகின்றது. 'திருப்தியும், அமைதியும் நிறைந்திருக்குமோர் ராஜ்யத்தில் ஒழுங்கின்மையையும் கலகத்தையும் ஒருபோதும் உண்டாக்குதலாகாது. * * மகமதியர்களுள் எவன் தான், ஞானத்துடன், இதை மீறியே நடப்பான்? சட்டங்களை மறுதலித்தலெனில், ஒழுங்கீனமும், கலகங்களும் ஒருபொழுதும் நேரிடாமலேயே எப்படி இருக்கமுடியும்? 'கொரானி'ல் இருக்கின்ற இவ்வார்த்தைகளை எனது முஸ்லிம் சகோதரர்கள் அனைவரும் கவனிப்பார்களாக.''

இதைப் பார்த்தவுடன் மௌலானா மகமதலியும், மௌலானா ஷௌகதலியும் என்ன சொல்வார்களென்பதை அறிய நாம் ஆவலுடையவர்களாயிருக்கின்றோம். கொரானில் நமக்கெவ்விதத்திலும் பயிற்சியில்லையாகினும், நாம் இரு கேள்விகள் எப்படியும் இங்கே கேட்கலாம். தற்காலத்தில் இவ்விந்தியாவில் அமைதியும் ஆனந்தமும் குடியிருக்கின்றனவென்று நினைப்பவர்களுமிருக்கிறார்களா? மேலும் 'கொரானி'ல் கூறியுள்ளபடி, துருக்கி சுல்தானைக் காட்டிலும் மகமதியர்களுக்கு வேறொரு தலைவனுமுண்டோ? இருந்தாலும் இப்புதுப்பாடத்தைப் படிக்கும் ஆங்கிலேயர்கள் மிகவும் சந்தோஷமடைவார்கள். பிறகு நாம் மாத்திரம் ஏன் வருத்தப்படவேண்டும்? மௌலானா மகமதலி முதலியவர்களின் தைரியத்தையும், புத்திவுண்மையையும் பார்க்கிலும், இவ்வருமையான வாக்கியத்தை ஆங்கிலேயர்களுக்குக் கொடுத்து உதவிபுரிந்திருக்கும் இவருடைய பெருந்தன்மையையே நாம் மெச்சுகிறோம்!

பாபு சித்தரஞ்சன தாஸ்

மகாத்மாவின்கைங்கரியத்தில் மிகச் சிறந்தவரான பாபு சித்தரஞ்சனதாஸ் இப்போதுஜெயிலில் இருக்கிறார். அவர் விடுதலையடைந்ததும், நேராகப் பாட்னாவுக்குச்சென்று அங்கே ஒரு கேசில் வாதிக்கப் போவதாய் 'பெங்காலி' பத்திரிகை கூறுகின்றது. சமீபத்தில் அவருடைய பந்துக்கள் இருவர் மறுபடியும் தமது வக்கீல் தொழிலைநடத்த ஆரம்பித்திருப்பது இதற்கு அனுகுணமாகவே காணப்படும். போன வாரத்திய 'தமிழ் உலகி'ல், ஸ்ரீமான் M.R. ஜயகர் சம்பந்தமாக எழுதப்பட்டிருப்பதை நமது நேயர்கள் படித்திருப்பார்கள். இதனால், மகாத்மா காந்தி சொற்படி வக்கீல்கள் தங்கள் தொழிலை நிறுத்திவைப்பது பெரும்பாலும் முடியாத காரியமென நாம் ஊகிக்கின்றோம். Messrs. ஜயகரும், தாஸும் முற்றும் தைரியசாலிகள் ஆனதால், தமதெண்ணங்களை அவர்கள் ஒருபோதும் பயப்படாமலே வெளியிடுவார்கள். மகாத்மா காந்தியின் ஆணைகளை ஒருவன் நிறைவேற்ற வேணுமென்றால், அவனும் அவரைப் போலவே எல்லா அம்சங்களிலும் இருக்கத்தான் வேண்டும். பணத்தையும், சுகத்தையும், மனைவி, மக்கள் முதலானவர்களையும் முழுவதும் விட்டுவிடுவது மனிதர்களின் இயல்பாய் இல்லை. இதையறிந்தே இந்தியாவில் பலர் மகாத்மா காந்தியுடைய ஆஞ்ஞைகளைச்செய்து முடிப்பது சாத்தியமாயில்லையென்றார்கள். இங்கே ஒரு விஷயத்தைப்பற்றி நாம் வற்புறுத்த விரும்புகிறோம். முற்றிலும் அபிப்பிராய பேதங்களுக்காக நாம் ஒருவரையொருவர் நிந்தித்து வருவது அழகல்ல. தர்மோபதேசம் பண்ணுவதற்கு நாம் எண்ணவில்லையாகினும், இக்காலத்தில் நிரம்பவும் யோக்கியர்கள் சிலர் மரியாதைக் குறைவாகவே நடத்தப்பட்டு வருவதும் உண்மையே. சில நாட்களுக்கு முன், ஒரு நண்பர் பின்வரும் வரலாற்றை நமக்குத் தெரிவித்தார். இந்தியாவிலுள்ள தலைவர்கள் ஜனங்களுக்குச் சிறிதேனும் பிடிக்காத விஷயங்களில், தங்களது மனச்சாட்சி சொற்படியே கொஞ்சமும் கலங்காமல் நடப்பதற்குத் தயங்குகின்றார்களென ஸ்ரீமான் ஜயகர் நம்முடைய நண்பரிடம் கண்டித்ததுண்டு. பதினாயிரக்கணக்காக ஜனங்கள் கூட்டங்கள் கூடி, கைகொட்டி, ஆரவாரம் செய்தாலொழிய, நமது தலைவர்கள் தைரியமாய் எதையும் செய்வதற்காக முன்வருவது துர்லபமாகி விட்டதென்றே ஸ்ரீமான் ஜயகர் நமது நண்பரிடம் முறையிட்டார். இதுவும் ஓர் பெருத்த குற்றமல்லவா?

என்ன விபரீதத்திற்காகவோ?

சில மாதங்களுக்குமுன், ஸர். சங்கரன் நாயர் மகாத்மா காந்தி சம்பந்தமாக ஓர் புஸ்தகத்தை எழுதி வெளியிட்டிருக்கின்றார். அதில் பஞ்சாப் விஷயங்களைப்பற்றி அவர் சொல்லியிருப்பதில் சில பாகங்கள் தன்னை நிந்தித்தலாகுமென ஸர். மைகல் ஓட்வையர் அவர்மீது மான நஷ்டத்திற்காக இப்பொழுது ஓர் வழக்குக்கொண்டு வந்திருப்பதை நமது நண்பர்கள் அறிந்திருக்கலாம். வைஸ்ராயுடைய கௌன்ஸிலில், ஸர். சங்கரன் நாயர் மெம்பர் உத்தியோகம் பார்த்து வந்தவராதலால் அவருக்குப் பல ரகசியங்கள் தெரிந்திருக்கக்கூடுமென்பதில் சந்தேகமில்லை. ஆகிலும் ஸர். மைகேல் தான் எவ்விதத்திலும் ஒரு பிசகும் செய்யவில்லையென்றே சொல்லிவருகிறார். இவ்விஷயமாக 'டிச்சர்' என்பவர் 'காபிடல்' என்னும் பத்திரிகையில் எழுதியிருப்பது மிக்வும் ரஸமுள்ளதாய் இருக்கும்.

"இந்த கேசைப்பற்றிக் கேட்டதும் நமக்கு மிக்கக்கவலையுண்டாகின்றது. ஸர். சங்கரன் நாயர், ஸர். மைகல் ஓட்வையர், இருவர்களும், விடாமலும், கொடாமலும் சண்டைசெய்வதில் தீரர்கள். தாங்கள் நினைத்த காரியத்தை எப்படியும் சாதித்துக் கொள்வார்கள். இருவரும் பலம் படைத்தவர்களாதலால், இக்கேஸில் கிளப்பப்படும் கதைகள் இந்தியர்களுக்கும், ஆங்கிலேயர்களுக்குமுள்ள வித்தியாசங்களை மேன்மேலும் அதிகரிக்கச்செய்யும். இந்தியாவில் ஒருவருக்கொருவர் எங்கும் சமாதானம் நிலைபெற்றிருக்க வேண்டுமே யெனக் கவலைப்பட்டு வருபவர்கள் இக்கேஸ் நடைபெறுவதால் உண்டாகும் ஜாதி துவேஷத்தை யெண்ணியே நடுங்குவார்கள். * * * *

'பஞ்சாப்படுகொலைகள்' என்ற அத்தியாயத்தில் ஸர். சங்கரன் நாயர் சொல்வதாவது:—'பஞ்சாப் மாகாணவாசிகள் அனுபவித்திருப்பதற்காக என்னைப்போல ஒருவரும் வருத்தப்பட்டதில்லை. மேலும் பஞ்சாபில் நடந்த விஷயங்களை என்னைக்காட்டிலும் நன்றாக அறிந்திருக்கின்றவர்கள் யார்? இன்றைக்கும் எவ்வளவோ ரகசியமாகவே இருந்துவருகின்றது.' கேஸ்தொடங்கிவிட்டால், எல்லாவற்றையும் கோர்ட்டில் வெளிப்படுத்தித்தான் ஆகவேண்டும். மற்றும், ஸர். சங்கரன் நாயர்

கைவசத்தில் சிக்கிக்கொண்டிருக்கும் ரகசியங்களும் பிரமாதமாகவே இருந்தால், 'ஒத்துழையாமை' யென்பதும், 'சட்ட மறுப்பு' என்பதும் திரும்பவும் கொழுந்துவிட்டெரியும்.''

'டிச்சரை'ப்போல நாமும் இந்தகேஸ் கோர்ட்டுக்கு வராமலிருக்கவேண்டுமென்றே பிரார்த்திக்கவில்லை. கேஸ் நடக்கட்டும். ஸர். சங்கரன் நாயருக்கும் என்னகதி நேரிடுகின்றதென்பதைப் பார்க்க ஆவலுடன் காத்திருக்கிறோம்.

'விசுவபாரதி'

மகாகவி டாக்டர் ரவீந்திரநாத் டாகூர் மிகவும் சிரமமெடுத்துக்கொண்டு சமீபத்தில் ஸ்தாபித்திருக்கின்ற சாந்திநிகேதன் சர்வகலாசாலையில், விவசாயப் படிப்புக்காகவே, சுருல் (Surul) என்னுமோர் கிராமத்தில் ஓர் காலேஜ் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. போல்பூர் ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து இக்கிராமம் இரண்டுமைல்கூட இல்லை. இக்காலேஜை ஒரு 'டைரக்டரும்' 'சுருல் விவசாயபோர்ட்' மெம்பர்களும் கவனித்து வருகிறார்கள். அவர்களுடைய முக்கிய கருத்தாவது:—

1. கிராமவாசிகளுடையவும், குடியானவர்களுடையவும், நம்பிக்கையையும், சிநேகத்தையும், பிரியத்தையும் சம்பாதித்தல். மேலும் அவர்களுடைய கஷ்ட நிஷ்டூரங்களை நன்றாய் அறிந்து அவர்களுக்கு ஒத்தாசையும் செய்தல்.

2. விவசாயவிஷயங்களையும் ஓர் சாஸ்திரத்தைப் போலவே, மிகுந்த ஊக்கத்துடன் ஆராய்ந்து பார்ப்பதும், மற்றும் அவைகளில் பல புது வழிகளைக் கண்டு பிடிப்பதும்.

3. கிராம வாழ்க்கையை எல்லா துறைகளிலும் சீராக்குதல்; கிராமங்களில் ஜனங்களுடைய தேக ஆரோக்கியத்தை விருத்தி செய்தல்; ஆடுமாடுகள் வளர்ப்பதிலும், கைத்தொழில்களை மேன்மேலும் முன்னுக்குக் கொண்டுவருவதிலும், அக்கரை பாராட்டுதல்; இன்னும் ஜனங்களுக்குள் ஒற்றுமையையும் நிலை நாட்டுதல்.

4. கிராமங்களில் எல்லோருக்கும் எழுதப்படிக்கக் கற்பித்தல்; 'பாய் ஸ்கௌட்' (Boy Scout) பிரயோஜனங்களை ஜனங்களுக்குக் காண்பிப்பதும், மேலும் அவைகளைக் கிராமவாசிகள் கொண்டாடவும் செய்தல்; பொது ஜன சமூகத்திற்காகவும் எல்லோரும் உழைத்துவருவதால் விளையும் உபயோகங்களை அவர்களுக்குக் காட்டுதல்.

5. இவ்விவசாய காலேஜில் படிப்பவர்களுக்கும், கற்பிப்பவர்களுக்கும், கிராமங்களிலுள்ள ஏழை ஜனங்களிடம் ஓர் உறவும், விசுவாசமும் உண்டாகும்படி செய்தல்; மேலும் ஏழைகளுடன் சரிசமானமாகவும் பழகுவதற்கு அவர்களைத் தயாராக்குதல்.

6. தங்களுடைய கௌரவத்தை சிறுவர்கள் உணர்ந்து, எக்காரியங்களையும் தாமாகவே செய்வதற்குக் கற்றுக்கொள்ளுதல்.

7. விவசாய விஷயங்களிலும், தச்சுவேலை, கொத்துவேலை, முதலியவைகளிலும் பையன்கள் ஊக்கத்துடன் தேறுதல்.

இதற்காக இரண்டு வருஷம் ஒவ்வொருவரும் படிக்கவேண்டும். இக்காலேஜில் சேருவதற்கு முன்னமேயே மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் பையன்கள் தேறியிருப்பதும் இன்றியமையாதது. கொஞ்சகாலத்திற்குப் பிறகு சில சாஸ்திரங்களில் பிரதானமாக உயர்தரப்படிப்பும் அளிக்கப்படும். இங்கே படிப்பவர்களெல்லோரும் விவசாய சம்பந்தமாய், முற்றிலும் அகங்காரத்தைவிட்டுத், தாமே உழைக்கவும் வேண்டும். அவர்கள் செய்யும் வேலைக்காக உடனே 'டைரக்டர்' சம்பளமும் கொடுத்துவிடுவார். இந்த வரும்படியைக்கொண்டு சிறுவர்கள் சகல செலவுகளையும் தாங்கக்கூடும். அவர்களுடைய சாப்பாட்டுக்குப்போக பாக்கியிருப்பது சொந்த செலவுகளுக்கும் உபயோகப்படும். விவசாயத்திற்காக ஒவ்வொரு பையனுக்கும் தனியாகவே சொல்ப பூமியைக் கொடுப்பார்கள். அதிலிருந்து வரும் வரும்படி அவனதுதான்.

காலேஜ் சம்பளம்:—

முன் பணம்	ரூபாய்	10.
'அட்மிஷனு'க்காக	,,	20.
ஒவ்வொருமாதமும்	,,	26.
ஆரம்பத்தில் 'டிபாஸிட்'	,,	5.

பெற்றோர்களாவது, கார்டியன்களாவது இக்காலேஜில் படிக்கின்றவர்களுக்குத் தாமே நேரில் பணமுமனுப்பக்கூடாது. எல்லாம் ஆபீஸுக்குத்தான் நேராகவே அனுப்பப்படவேண்டும். பையன்களும் 'டைரக்ட'ரது உத்தரவின்றி பெற்றோர்களை அதிகச் செலவுக்காகப் பணம் கேட்பதும் முடியாதது. பணக்காரர்களுக்கென்று ஒருவிதத்திலும் பிரத்தியேகமாய் ஏற்பாடுகள் செய்யப்படமாட்டா. மேலும் பெற்றோர்களும் அம்மாதிரியாக ஒன்றையும் கேட்கமாட்டார்களென இக்காலேஜ் அதிகாரிகள் நம்புகின்றார்கள்.

—('மாடர்ன் ரிவியூ'விலிருந்து எழுதப்பட்டது)

ஒரு பாஷையின் சக்தி—லார்ட் லிட்டன்

சில மாதங்களுக்கு முன் பங்காளத்தில் கவர்னராய் நியமிக்கப்பட்டிருக்கும் லார்ட் லிட்டன் இப்பொழுது 'பெங்காலி' பாஷையை மிகுந்த உத்சாகத்தோடு கற்றுவருவதாய் சொல்லப்படுகின்றது. அவருக்கு முன்பும் அங்கே கவர்னர்களாயிருந்த லார்ட் கார்மைகலும், லார்ட் ரொனல்ட்ஷேயும் இப்பாஷையை சிரத்தையுடன் கற்றதுண்டு. சமீபத்தில் லார்ட் லிட்டன் 'ஸாரஸ்வத ஸமாஜத்தில்' பேசும்போது, 'பெங்காலி'யில் தனக்கு ஞானமில்லாததாலேயே, வேறொரு பாஷையில் தான்பேச நேர்ந்ததுபற்றி மிகவும் வருந்தப்படுவதாய்த் தெரிவித்தார். மேலும் கூடிய சீக்கிரத்தில் பெங்காலிகளுடன் பேசும் பொழுதெல்லாம் அவர்கள்பாஷையில் பேசுவதற்குத்தான் முயன்று வருவதாகவும் சொன்னார். ஆங்கிலமறிந்த கவர்னர்கள், ஜனங்கள் பேசிவருகின்ற மொழிகளையும் கற்கவேண்டுமென்று ஒரு கட்டாயமும் இல்லை. ஆகிலும் பங்காளத்தில் மூன்று கவர்னர்கள் தாமாகவே பெங்காலியிலும் ஞானத்தைத் தேடியிருக்கிறார்கள். ஜனங்களுடன் கவர்னர்கள் நேரில் பேசுவதால், அவர்களுடைய குறைகள் எல்லாவற்றையும் நன்றாய்த் தெரிந்து கொள்ளக்கூடும். மாசூமை தங்கிய விக்டோரியா மகாராணியார் அவ்வளவு வயதுக்கு மேலும் ஓர் ஹிந்துஸ்தானி முன்ஷியிடம் ஆவலோடு படித்து வந்தாரல்லவா? பெங்காலி பாஷையின் தன்மை எவனையும் தன்னிடம் மோகிக்கச் செய்கின்றது. மகாகவி டாக்டர் ரவீந்திரநாத் டாகூரைப் போன்ற மேதாவிகள் பெங்காலியையும் அவ்வாறு கொண்டாடுவதின் நன்மைகளில் இதுவும் ஒன்றாகும். மற்றவர்களுடைய பாஷைகளை எப்பொழுதும் லக்ஷியமே செய்யாத ஆங்கிலேயர்கள் 'பெங்காலி'யிடம் இவ்வாறு

கௌரவமும் பாராட்டிவருகிறார்களென்றால், அப்பெருமை பங்காளத்தில் பிறந்து வளர்ந்தவர்களது அல்லவா? இத்தமிழ் நாட்டில் நாமும் நமது பாஷையை முன்னேறச் செய்வதற்கு பெங்காலிகளிடமிருந்தே கற்றுக்கொள்வோம்.

சோதிடப்புலி சோணாசலம். 2.

நான் சோணாசலத்தைப் பார்த்து வந்த பிறகு, ஒருநாள் கச்சேரியிலிருந்து கடற்கரை வழியாய் வீடு நோக்கி வருகையில், கைம் பெண்மடத்துக்கு அருகாமையில், என் பக்கத்தில் ஒரு மோட்டார் வண்டி வந்து நின்றது. ஆரென்று திரும்பிப்பார்க்கையில் அதிலிருந்து சோணாசலம் இறங்கிவந்து என் கையைப்பிடித்துக்கொண்டு, 'என்ன, கடலோடு பேசிக்கொண்டுபோகிறாய்,' என்றான்.

"இப்பொழுதுதான் உன்னை நினைத்துக்கொண்டேன்; நீ உடனே வந்துவிட்டாய். என்ன, ஆருடைய வண்டி; கோபாலமூர்த்தி அய்யருதா? அய்யர் உன் கையிலகப்பட்டுவிட்டாரா?"

"கையில் மாத்திரமா? என் பையில் வந்துவிட்டார். அது உனக்குத் தெரியாதா? ஆயிரம் ரூபாய் வரைக்கும் பற்றியாய்விட்டது."

"அடே, நான் அவர் உன்னிடத்தில் மோசம் போகமாட்டாரென்றிருந்தேன். அதிருக்கட்டும், அன்றைக்கு நீ பாட்டுச்சொன்னபொழுது, அவர் பிரமையடைந்ததற்குக் காரணமென்ன?"

"அது உனக்குத்தெரியாதா? அவருடைய ரகசியத்தை வெளிப்படுத்தி, நான்காம் அடியில் பொடி வைத்திருந்தேன், பார்க்கவில்லையா?"

"ஆமாம், நான் சந்தேகித்தேன், 'பன்னியர் இருவராகு' மென்றாயே,—அய்யருக்கு வயது ஐம்பதுக்கு மேலாய்விட்டதே; அவர் இனி மனைவி இறந்தால் கூட மறுபடியும் கல்யாணஞ் செய்துகொள்ள மாட்டாரேயென்று யோசித்தேன்."

"அடாடா, உனக்குக்கூட என்ன இவ்வளவு புத்தி மந்தமாய்விட்டது. மனைவியிருக்கையில் மற்றொருதாரம் விவாகம் செய்துகொள்ளக்கூடாதா? நான் சொல்லும் சாஸ்திரம் பொய்யாகுமாவென்று நீ யேன் யோஜிக்கவில்லை?"

"சீ, அய்யர் ஆசார சீர்திருத்த சபைக்குத் தலைவரப்பா; அவர் இரண்டாம் தாரம் அப்படி செய்து கொள்வாரா? மாட்டார்."

"ஆமாம், பலரறியச் செய்து கொள்ளமாட்டார். அதினால்தான் திருட்டுத்தனமாய்த் திருப்பதிக்குச் சென்று செய்து கொண்டுவந்தார்."

"இதென்ன விபரீதம்! ஊரில் ஒருவருக்கும் இது தெரியவில்லை. கழுகுக்கு மூக்கில் வேர்க்குமென்பதுபோல, உனக்கு எவ்வாறு தெரிந்தது?"

"சாஸ்திரபலம் தானப்பா. இவைகளெல்லாம் தெரியாவிட்டால் நான் பிழைப்பதெப்படி? நான் உத்தியோகமா செய்கிறேன், மாதம்தோறும் சம்பளம் வாங்குகிறதற்கு?"

"இன்றைக்கு அவர் வண்டியில் வந்திருப்பதைப் பார்த்தால், நீ யின்னம் அவரை விடவில்லை போலிருக்கிறதே. இன்னமும் பாக்கி வர வேண்டியிருக்கிறதோ?"

"பாதிக்கு மேலும் வரவேண்டியிருக்கிறது. நான் விட்டாலும், அவர் என்னை விடப்போகிறதில்லை. அதற்கு நான் அன்று சொன்ன பாட்டின் மூன்றாமடியில் அடிபோட்டேன் 'தாரணிக்கோர் தலைவனாகு'மென்றேன்,'—கவனிக்கவில்லையா?"

"ஆகா! அப்படியா! கவனித்தேன். அதில் கூட பிசகாய் 'தாரணிக்கோர் தலைவனாகு' மென்றாய். ஏனிப்படிச் சொல்லுகிறானென்று நினைத்தேன்."

"அதைக்கூட கவனித்தாயா? நான் இப்பொழுது சொன்னபடி தான் பாடம். அன்று பிசகாய் வந்தது. ஆனாலதுவும் ஸாதகமாகவே யிருந்தது. அதனால்தான் திருத்தவில்லை. அய்யர் தான் அழகிற் சிறந்தவரென்று அபிப்பிராயமுள்ளவர். அவர் மனதிற்கிணங்க, 'அழகிய தலைவனாகும்', என்று விழுந்தது நலமென்று விட்டுவிட்டேன்."

"அடே, திருட்டுக்கு இருட்டு உதவியென்பது போல, உன் பொய்க்கெல்லாம் பிசகுகள் கூட ஒத்தாசையாக விருக்கின்றன."

"மறுபடியும் பொய்யென்றே சொல்லிக்கொண்டிருக்கிறாயே; இருக்கட்டும். பொய்யல்லாத வஸ்து ஏதாவது உலகத்திலுளதோ? சொல்,—பார்ப்போம்."

"அப்பா, ஜோஸியம் சொல்வது போதாதென்று வேதாந்தம் வேறே பேச ஆரம்பித்துவிட்டாயா? ஏது, இனிமேல் உலகமே முழுகிப்போகும்."

"நான் உன்னை அதிக அறிவுடையவனென்று நினைத்திருந்தேன். இப்பொழுது சந்தேகம் வருகிறது. நீ புராணங்கள் அதிகமாகப் படித்திருக்கிறாயே,——அதில் அண்ட புராணங்கண்டதில்லையா? கண்டிருந்தால் பொய்யை இவ்வாறு இகழ்ந்துகூற மாட்டாய். உலகத்தில் ஏதாவது மெய்யாயிருந்தால், அது உலகமெல்லாம் பொய்மயமென்பதாம். உலகைக்காக்கும் கடவுளாகிய விஷ்ணுவை கூட நாடக சூத்திரதாரி யென்கிறார்களே,———அதற்கென்ன பொருள் தெரியாதா? அவர் இவ்வுலகத்தை மாயையின் பெருமையாலல்லவா ஆண்டு வருகிறார்! அவரது மகிமையாலே தான் சோதிடர்கள் பிழைக்கிறார்கள். இச்சோதிடத்தில் வல்லவராகிய சுக்கிராசாரியர், மகாவிஷ்ணுவிடத்தில் சார்ந்து அவரை வணங்க, அவரும், கருணையால் மலர்ந்த கண்ணோடு, வந்தவகை யேதென்று வினவ, பின்வருமாறு சொல்லுகிறார்:—

'மய்யுறுமதியும் வானின் மீன்களுமிரவிதானும்
கய்யுறு நெல்லிக்கனியினிற் காணவேண்டி (றக்கு
நெய்யுறு விளக்கையேற்றி நெடுநிசி கழிக்கின்றே
பொய்யுறும் நின்னையன்றிப் புகலுண்டோவருள
(வேண்டும்."

"அப்பா, போதும், அரசமரத்தைப் பிடித்த சனியன் பிள்ளையாரையும் கூடப்பிடித்ததாமென்றபடி, நீ பொய் சொல்லப்போக, தெய்வமே பொய்மயமென்கிறாய். இதைப்பற்றி சாவகாசமாய்ப் பேசிக்கொள்வோம். இப்பொழுது அய்யர்வாள் வீட்டுக்குப் போகிறாயா என்ன?"

"ஆமாம், அங்குதான் போகிறேன். இன்று ராத்திரி அவர் ஜாதகத்திற்கு அஷ்டகவர்க்கம் போட்டுப்பார்க்கப் போகிறேன். அவர் கவர்னர் வேலைக்குப் பிரயத்தனம் செய்துகொண்டிருக்கிறாரென்பது தெரியாதா? அதற்காகத்தான் பாட்டிலேயே 'தாரணிக்கோர் தலைவனாகு'மென்றுசொன்னேன்."

"அப்பா, நீ யொரு ஆழ்வார் போதாதா? இன்னும் அஷ்டாயுதமும் வேண்டுமா? பாராமல் புளுகுவது போதாதென்று, பார்த்து வேறே புளுகப் போகிறாயா? சரி, அவருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது. நான் அவரைக் கண்டால் சொல்லிவிடுகிறேன்."

" அப்படி மோசம் பண்ணுதே. ஆனாலும் நீயப்படி சொல்லும்படி விடமாட்டேன். அதற்குத் தகுந்தவழி செய்திருக்கிறேன். அவரைப் பார்த்தபொழுது, என் பிரஸ்தாபம் செய்தாரா பார்த்தையா? எனக்கு உன் சமாசாரம் தெரியும். உண்மை உண்மையென்று சொல்லி, யேதாவது உளரிவிடுவாயென்றுதான். அவரை சரிப்படுத்தி வைத்திருக்கிறேன்."

' ஏ அப்பா, மகாமாயாவி! அதினுல்தான் அவர் இதைப்பற்றிப் பேசவேயில்லை. நானும் மறந்துவிட்டேன். இனி அவர் உன்வலையில் சிக்கிக்கொண்டபிறகு தப்ப வழியேது? நல்லது, இருட்டாகிறது. நான் வீட்டிற்குப் போகவேணும், என் தாயார் விசாரமடைவாள்."

" அம்மாள் சௌக்கியமாயிருக்கிருளா? நீயழைக்காவிட்டாலும், நான் ஒருதடவை வந்து பார்த்து விட்டுவரவேணும்."

"அடே, யார் வீட்டுக்கு அழைக்கிறது? நமக்குள் அந்த வித்தியாசம் எத்தனை நாளாய் உண்டாயிற்று? நாளை ஞாயிற்றுக்கிழமை சாவகாசமாய் வா. வந்தால் நாம் முன்போல வேடிக்கையாய்க் காலம் கழிக்கலாம்."

" அப்படியே வருகிறேன்—நீ மயிலாப்பூருக்குத்தானே போகிருய்? என்னுடன் வண்டியில் வா. உன்னை வீட்டில் விட்டுவிட்டு, நான் அய்யரவர்கள் வீட்டுக்குப் போகிறேன்."

உடனே இருவரும் வண்டியேறிச் சென்று, நான் என் வீடடைந்தேன்.

—'ராமசந்திரர்.'

இரண்டு கிழவர்கள்
(Adapted from Tolstoy)

ஸ்ரீமான் V. நாராயணையர் M.A.M.L. எழுதியது.

கோகுலம், பிருந்தாவனம் மதுராபுரி முதலிய அவதார ஸ்தலங்களைப்போய் தரிசித்து வரவேண்டுமென்று இரண்டு கிழவர் அபிப்பிராயப்பட்டனர். அவர்களில் ஒருவன் பணக்கார இராமன். மற்றவன் கிருஷ்ணன் அவ்வளவு பணக்காரனல்ல.

இராமன் நல்ல யோக்கியதையுள்ளவன்; குடிப்பது புகையிலை மெல்வது பொடி போட்டுக்கொள்வது என்ற பேச்சே கிடையாது. கெட்ட வார்த்தை அவன் நாவில் ஒருநாளும் எழாது. கிராம விசாரணைக் கூட்டத்திற்கு அவன் இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டவன்; அப்போது கணக்கு இம்மிகூட பிசகாது; வழக்குகளில் அவன் கொஞ்சமும் பக்ஷபாதமின்றி இருந்தான். அவனுக்கு இரண்டு பிள்ளைகள், ஒரேபேரன்; எல்லோரும் ஒன்றாகத்தான் வாழ்ந்துவந்தார்கள். அவன் வயதாகியும் குடும்பத்திற்காக முன்போலவே உழைத்துவந்தான்; அவனுடைய தேகக்கட்டு கொஞ்சமேனும் தளரவில்லை. அறுபது வயதான பிறகு இப்போது தான் தாடியில் கொஞ்சம் நரைதோன்ற ஆரம்பித்திருந்தது.

கிருஷ்ணன் அதிக பணக்காரனுமல்ல ஏழையுமல்ல. இளம் வயதில் தச்சுவேலை செய்து ஊர் ஊராய் சுற்றி ஜீவனம் செய்துவநதான். இப்போது வயதானபடியால் வீட்டிலிருந்துகொண்டே சில்லரை வேலை செய்வதாயிருந்தான். அவன் பிள்ளைகளில் ஒருவன் வேலை பார்க்க வெளியூருக்குப் போயிருந்தான். மற்றவன் வீட்டிலிருந்தான். கிருஷ்ணன் உற்சாகமும் நற்குணமும் பொருந்தியவன். சில வேளைகளில் கொஞ்சம் குடிப்பான்; ஆடிப்பாடித்திரிவான்; கொஞ்சம் பொடி போட்டுக்கொள்ளுவான், வாஸ்தவந்தான்; என்றாலும் மொத்தத்தில், அவன் சாந்த சுபாவமுடையவன். குடும்பத்தாருடனும் அக்கம் பக்கத்தாருடனும் சண்டை சச்சரவின்றி ஒத்து வாழ்ந்துவந்தான். பார்வைக்கு சற்று குள்ளமான சரீரம், கருப்பு நிறம், அடர்ந்த தாடி, வழுக்கைத்தலை.

இவ்விரு கிழவரும் நெடுநாளாய் கிருஷ்ண பகவானுடைய அவதார ஸ்தலங்களான மதுரை கோகுலம் பிருந்தாவனம் முதலிய ஊர்களைத்தரிசித்து வரவேண்டுமென்று எண்ணியிருந்தார்கள். ஆனால் இராமனுக்கு ஒருபோதும் ஒழியவில்லை. ஏதாவது காரியமிருந்து கொண்டேயிருக்கும்; ஒன்று முடிந்தால் இன்னொன்று கிளம்பும்; முதலில் பேரனுக்குக் கல்யாணம் ஆகவேண்டியிருந்தது; அதைக்கண்டு ஆனந்தித்த பிறகு, இளையவன் சைனியத்தில் சிப்பாயாய்ப்போனவன் திரும்ப வருவான்; அவனைப் பார்த்துவிட்டுப்போகவேண்டுமென்று இருந்தான். கடைசியாக இப்போது புது வீடு ஒன்று கட்டிக்கொண்டிருந்தான்.

ஒருநாள் சாயங்காலம் இருவரும் வாசலில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர்.

" சரி, எப்போது நாம் அங்கே புறப்பட்டுப் போவது?"—இராமன் முகம் சற்றுவாட்டமடைந்தது.

" அவசரப்பட்டு முடியுமா, என்ன? இந்த வருஷம் வெகு தொல்லையாய் முடிந்தது, இந்த வீடு கட்டத்துவக்கினவேளை. ஏதோ நூறு இருநூறு ஆகுமென்று எண்ணி ஆரம்பித்து விட்டேன். நானூறு ரூபாய்வரை இழுத்துவிட்டது. இன்னும் கட்டி முடிந்தபாடில்லை. எல்லாம், சித்திரை பிறந்தபின் போகலாமே. தெய்வ சங்கல்பம் மட்டும் இருந்தால், அப்போது கட்டாயமாய் புறப்படுவோம்."

"எனக்கென்னமோ இப்படி ஒதுக்கிக்கொண்டே போவதுசரியென்று தோன்றவில்லை. அதுவும் தை மாதம் போவதுதான் சௌகரியமாயிருக்குமாம்.

" ஆமாம். ஆனாலும் நான் இந்த வீட்டைக்கட்டிக்கொண்டு மாரடிக்கிறேனே, என்செய்வது."

" நீதானே உழைக்கவேண்டும். வேறொருவருமில்லையோ? உன் பிள்ளையிருக்கிறான், பார்த்துக்கொள்வான்."

" அதெப்படி? அவனை நம்பி விட்டுவிடலாமா? அவனுக்கென்னதெரியும், குழந்தை; ஒருவேளை கொஞ்சம் அதிகமாய் குடித்துவிட்டால்—."

" இல்லையப்பா, எப்போதுமிப்படி நாமேயா தாங்கிக்கொண்டிருக்கப் போகிறோம். நாமென்ன சாசுவதமா? உன் பிள்ளைக்கும் இவ்விதமாவது கொஞ்சம் அநுபோகம் உண்டாகட்டுமே."

"உண்மையே, ஆயினும் ஆரம்பித்ததை எப்படியாவது ஒருவகையாய் முடித்துவிட்டுத்தானே வரவேண்டும்."

"ஓகோ, அப்படி எல்லாவற்றையும் முடிப்பதென்றால் கடலலை ஓயுமுன் முடியுமோ?"

இராமன் யோசிக்கலானன்.

"சரி, புறப்படுவோமென்றால் பணம் வேண்டாமா. கையிலிருந்ததையெல்லாம் இந்த வீட்டில் கொட்டி விட்டேனே, வெறுங்கையனாய் புறப்பட முடியுமா? ஆளுக்கு நூறுரூபாயாவது வேண்டாமா. அதற்கு எங்கேபோவது."

கிருஷ்ணனுக்கு சிறிப்புவந்தது.

"போதும், போதும், அண்ணா. இந்தப்பேச்செல்லாம் யாரிடம். என்னைவிட பத்துபங்கு அதிகம் பணக்காரராயிற்றே நீர்; புறப்படுவோமென்று மட்டும் சொல்லிவிடும், இப்பொழுது என்கையில் ஒன்றுமில்லாவிட்டாலும் இதோ ஒருகணப்பொழுதில் எப்படியாவது சம்மாளித்துத் தயாராகிறேன், பாரும்."

"ஓகோ, இது எனக்குத் தெரியாதே. அவ்வளவு ஏற்பாட்டுக்காரனா நீ. எங்கேயாவது பணத்தை ஒளியவைத்து இருக்கிறாயோ?"

"இல்லை, ஏதோ வீட்டிலிருப்பதை சுரண்டிச் சேர்த்து காணாததற்கு இருப்பில் இருக்கும் நெல்லை கொஞ்சம் விற்று, பக்கத்து வீட்டுத்தாண்டவராயன் ஐந்தாறு தென்னைமரம் குத்தகைக்கு வேண்டுமென்று கேட்டான், அதையும் குத்தகைக்குவிட்டு நூறு ரூபாய்க்குக் குறையாமல் சேர்த்து விடுவேன்."

"அப்புறம் இந்தவருஷம் தேங்காய் காய்ப்பு நன்றாயிருந்தால் வருத்தமடைவாய்!"

"வருத்தமென்னத்திற்கு வருத்தம்; சுவாமி கிருபையால் இதுவரை வருத்தப்படும்படியொன்றும் வரவில்லை, நான் செய்தபாவங்களைத்தவிர."

"சரி, ஆனாலும் வீட்டை இப்படி பாதியிலே விட்டுப் போவதா."

ஜீவனைமாத்திரம் கவனிக்காது விட்டுவிடலாமா. அதையும் பார்த்துக் கொள்ள வேண்டாமா. போகிறதென்றும் முன்னமேயே கோரிவிட்டோம். போகாதிருக்கலாமா" என்று கிருஷ்ணன் சொல்ல இராமன் கடைசியில் ஒருவாறு சம்மதித்தவன் போலிருந்தான்.

மறுநாட்காலை எல்லாவற்றையும் நன்கு யோசித்து இராமன் கிருஷ்ணனிடம்வந்து நீ " சொன்னவையெல்லாம் சரி; நாம் இப்பொழுதே போவோம்; எல்லாவற்றிற்கும் சுவாமி ஒருவர் இருக்கிறார். அவர் கையில் ஒப்புவித்து நமக்கு தேகத்தில் திறனிருக்கும் போதே போய் வரவேண்டும்'என்று சொல்லவே, அடுத்தவாரம் புறப்பட இருவரும் தயாராயினர்.

2.

இராமனிடம் வேண்டுமான பணமிருந்தது. நூறுரூபாயை எடுத்துக்கொண்டு மிகுந்த ரூபாய் இருநூற்றையும் தன் மனைவியிடம் செலவிற்கு என்று கொடுத்தான். கிருஷ்ணனோ, பத்து தென்னைகளை தாண்டவராயன் அநுபவத்திற்குவிட்டு ரூபாய் எழுபது அவனிடமிருந்து பெற்றுக்கொண்டு வீட்டில் தன் பெண்சாதி இறந்துபோனால் செலவிற்கு என்று வைத்திருந்ததையும் வேறு கையிலிருந்த பணத்தையும் எல்லாவற்றையும் திரட்டிச்சேர்த்தான். அவன் மருமகளும் தன்னிடமிருந்ததைக் கொடுத்தாள். இப்படியாக ஒரு நூறுரூபாய் சேர்ந்தது.

இராமன் மூத்தபையனை யழைத்து அவனிடம் ஒவ்வொரு விஷயத்தைப்பற்றியும் தெளிவாய் அப்படிச்செய்யவேண்டும், இப்படிச்செய்யவேண்டுமென்று எடுத்துரைத்து எல்லாவற்றிற்கும் ஏற்பாடுசெய்தான். எப்போது அறுப்பு அறுக்க வேண்டும், எவ்வளவு உரம் எப்போது சுமந்து, வயலை எப்படி உழுதுபயிரிடவேண்டும் முதலிய விஷயங்களையும், எப்படி கூரைமேய்ந்து வீட்டைக் கட்டி முடிக்கவேண்டு மென்பதையும் சொல்லிவைத்தான். வெகு ஆலோசனைசெய்து ஒன்றையும் மறக்காமல் ஏற்பாடுகள் செய்தான். கிருஷ்ணன் தென்னை மரங்களில் தாண்டவராயனுக்கு விடப்பட்ட மரங்களை தன்மனைவியிடம் காட்டி இவைகளினின்று வரும் பலனை அநுபவியாமல் குத்தகைக்காரனுக்கு வேண்டிய சௌகரியத்தைசெய்துகொடுக்க வேண்டுமென்றுமட்டும் சொன்னானேயல்லாது வீட்டு விஷயங்களைப்பற்றி ஒருவார்த்தை கூட சொல்லவில்லை.

"அவர்களுக்குத்தெரியாதா, அப்போதப்போது என்னென்ன செய்யவேண்டுமென்று; இனி அவர்கள் தாமே வீட்டிற்கு எஜமானர்கள்; எது யுக்தமென்று தோன்றுகிறதோ அதைச்செய்யாதிருப்பார்களா" என்று நினைத்தான்.

கிழவர்கள் புறப்பட்டார்கள். மூட்டைகளைக் கட்டி, தோசைவார்த்து வேறு தின்பண்டங்கள் செய்து கொடுக்க, அவைகளை யெல்லாம் எடுத்துக் கொண்டனர். ஆளுக்கு இரண்டு ஜதை புதுச்செருப்புகள் வாங்கி, அவற்றில் ஒன்றை யணிந்து மற்றதை கையிருப்பாக வைத்துக்கொண்டார்கள். ஊர்க்கோடி வரையிலும் குடும்பத்தார் வந்து வழியனுப்ப யாத்திரை ஆரம்பித்தது.

ஆரம்பத்திலேயே கிருஷ்ணன் வீட்டுக் கவலையற்று உத்சாகமாய் வழிநடந்தான். தன் நண்பனை உற்சாகப்படுத்துவதும் வழியில் எவரையும் கண்டு கடிந்துபேசாமல் நடந்து யாத்திரையை முடித்து சுகமாய் வீடுவந்து சேர வேண்டும் என்பதுமே அவனுக்குக்கவலை. நடக்கும்போது "நாராயணா, ராமா" என்று சொல்லுவதும் பக்தர்களின் சரிதங்களை மனதில் ஸ்மரிப்பதுமாக வழி நடந்தான். யாரையாவது வழியில் சந்தித்தபோதும், இரவில் தங்கியிருக்கும் சத்திரங்களிலும், கண்டவர்களுடன் சாந்தமாய் பேசி பிரியமாய் பழகமுயன்றான். ஒன்றுமட்டும்தான் அவனால் முடியவில்லை. பொடி டப்பியை வேண்டாமென்று ஊரில்வைத்து வந்தபோதிலும் பொடி எங்கே கிடைக்குமென்று தேடி வாங்கிப்போட்டுக் கொள்வான். அப்போது, தன் கூடவரும் இராமன் இதைப்பார்க்கச்சகியான் என்று, சற்று பின் தங்கி ஒரு சிடிகை போட்டுக்கொண்ட பின்பு, முன் நடப்பான். இப்படி உல்லாசமாய் வழி நடந்தான் கிருஷ்ணன்.

இராமனும் சற்றும் தளராமல் நடந்துபோனான். வீண்வார்த்தை பேசாமலும் ஒரு பொல்லாங்கும் ஒருவருக்கும் நினைக்காமலு மிருந்தான். ஆனால் அவன் மனதில்மட்டும் அவ்வளவு உத்சாகமில்லை. வீட்டில் இப்போது என்ன நடந்துகொண்டிருக்கும் என்று அடிக்கடி யோசனை யுண்டாகும். அதைப்பற்றிச் சொல்லிவர மறந்தோமே, இதைத் தெரிவிக்காதுவிட்டோமே என்று சில வேளைகளில் கவலையுற்றிருப்பான். வழியில் கழனிகளுக்கு உரம் அடிப்பதைக்கண்டால் நம்முடைய குழந்தை எல்லாம் சரிவரச் செய்வானோ என்னமோ என்று ஏங்குவான். திரும்பப்போய் இவைகளை சரிவரச்செய்வித்து வரலாமோ என்றுகூடத் தோன்றும்.

3.

இப்படி ஐந்து வாரங்கள் வழி நடந்தனர். தாங்கள் இருப்பாகக்கொண்டுவந்த செருப்புகள் கூடத் தேய்ந்துவிட்டன. புதிதாக வாங்கிக்கொண்டார்கள். இதுவரை வரும்வழியில் தங்கியிருக்கவும் சாப்பாட்டிற்கும் பணம் கொடுத்தாக வேண்டியிருந்தது. இப்போது அவர்கள் அடைந்த பிரதேசத்தில் ஒருவரோடொருவர் போட்டி போட்டுக்கொண்டு இவர்களை உபசரித்தனர். எங்கள் வீட்டிற்கு வரவேண்டும், எங்கள் வீட்டிற்கு வரவேண்டும் என்று அழைத்தனர். வேண்டுமென்றவற்றையெல்லாம் கொடுத்தனர். பதில்பணத்தைத்தொடமாட்டோமென்றனர். பக்ஷணங்கள் செய்து இவர்கள் வழியில் சாப்பிடுவதற்கென்று

கட்டிக்கொடுத்தனர். இப்படி, யாதொரு செலவும் கஷ்டமுமின்றி இருவரும் வெகுதூரம் நடந்தனர். பிறகுவேறொரு நாட்டை யடைந்தனர். அங்கே பஞ்சக்கொடுமையால் ஜனங்கள் வருந்திக்கொண்டிருந்தனர். சென்ற போகம் தீய்ந்துபோய் அவர்கள் கஷ்டப்படுவதால் இவர்களுக்கு இரவில் தங்கியிருக்க இடம் கொடுத்தார்கள் என்றாலும் சாப்பாட்டிற்கு பணம் செலவிடவேண்டிவந்தது. சிலவிடங்களில் பணம் கொடுத்தாலும் சாப்பாடுகிடைப்பது அரிதாயிற்று. பணக்காரர் கூட பஞ்சத்தால் தவித்தனர். சொத்தை விற்று சாப்பிடவேண்டியிருந்தது. ஏழைகள் பிச்சையெடுத்துஉண்டோ அல்லது பட்டினிகிடந்தோ நசிக்கும்படி நேர்ந்தது.

ஒருநாளிரவு ஒருசிறுகிராமத்தில், தங்கினார்கள். அங்கே நிறைய அவல் கிடைத்ததால் அதை வாங்கிக்கட்டிக் கொண்டார்கள். விடியற்காலம் எழுந்து வெய்யில் வருமுன் பாதிவழி நடந்தாய்விட்டது. ஆகையால் அருகிலிருந்த ஒரு சிறு ஓடையை யடைந்து கிண்ணத்தில் ஜலமெடுத்து அவலை நனைத்து சாப்பிட்டு அங்கே சற்றுநேரம் இளைப்பாறினர். கிருஷ்ணன் பொடிப்பட்டையை யெடுத்தான். அதைக்கண்ட இராமன் தலையை அசைத்து “ஏனிந்தக் கெட்டவழக்கத்தை விடமாட்டேன் என்கிறாய்” “என்றான். “இல்லை, அதுதான் என்னை விடமாட்டேன் என்கிறது. என்னைவிட பலசாலியாயிருக்கிறது. நானென்ன செய்யலாம்.”

சற்று நேரமானதும் மறுபடி புறப்பட்டார்கள். ஐந்தாறுமைல் சென்றதும் ஒரு பெரிய கிராமத்தின் வழியாய் போய்க்கொண்டிருந்தார்கள். அப்போது வெய்யிலின் கொடுமை அதிகரித்து கிருஷ்ணன் சற்றுவாடினவனாய் கொஞ்சம் தாகத்திற்கு தண்ணீர் சாப்பிட்டு விட்டுப்போகலாம் என்றெண்ணினான். இராமன் நிற்கமாட்டான் போலிருந்தது. அவன் நன்றாய் நடப்பவன், அவனுடன் கிருஷ்ணனால் நடக்கமுடியவில்லை.

“கொஞ்சம் ஜலம் சாப்பிட்டால் இவ்வளவு சிரமமாயிராது” என்றான் கிருஷ்ணன்.

“ஆனால் சாப்பிடேன். எனக்கு ஒன்றும் வேண்டாம்.” இதைக்கேட்டு கிருஷ்ணன் சற்று தயங்கினான்.

“சரி நீ போய்க்கொண்டேயிரு; இதோ இந்தக் குடிசைக்குள் போய் ஒருநிமிஷத்திற்குள் உன்னுடன் வந்துசேருகிறேன்.” என்று சொல்லவே, சரி என்று இராமன் தனியே போய்க்கொண்டிருந்தான். கிருஷ்ணன் குடிசையை நோக்கித் திரும்பினான்.

அது ஒரு சிறு குடிசை; மண்சுவர் சற்று சரிந்து இருந்தது. கட்டி வெகு நாளாயிருக்கவேண்டுமென்று தோன்றிற்று. கூரையும் ஒரு பக்கம் திறந்திருந்தது. உள்ளே நுழையவே உட்திண்ணைமீது ஒருவன் விழுந்து கிடந்ததைக்கண்டான். அவன் விழுந்தபோது நிழலில் விழுந்திருக்கவேண்டும். இப்போது அவன் மேலடிக்கும் வெய்யிலை அவன் உணர்ந்ததாகத் தோன்றவில்லை. பார்த்தால் தூங்குகிறவன் போலில்லை. கிருஷ்ணன் சற்று நிதானித்து “ஐயா, சாப்பிடக் கொஞ்சம் ஜலம் வேண்டும்” என்று கூப்பிட்டான். அவன் எழுந்திருக்கவில்லை, பதிலுரைக்கவுமில்லை. “இதென்ன உடம்பில் வியாதியா அல்லது கொழுப்பா” என்று நினைத்துக்கொண்டு உள்வாசலண்டை போனான். உள்ளே ஒரு குழந்தை அழும் குரல் காதில் விழுந்தது. கதவை மெல்லத்தட்டினான், “யாரையா உள்ளே” என்று; பதில் உரைப்பவரில்லை. மறுபடியும் தட்டினான் “நாராயணா ராமா” என்று சொல்லிக்கொண்டு. அதற்கும் பதில் இல்லை.

“இது என்னமோ” என்று அவன் திரும்பும்போது ஹீனஸ்வரத்தில் ஒரு சத்தம் அவன் காதில் பட்டதுபோலிருந்தது.

“ஐயோ, யார் என்ன கஷ்டப்படுகிறார்களோ; உள்ளே போய்ப்பார்ப்போம்” என்று மறுபடியும் குடிசையுள் நுழைந்தான்.

4.

உட்கதவை யடைந்ததும் அது தாட்பாளிடப்படவில்லை என்று கண்டு மெதுவாய் அதைத் திறந்து உட்சென்றான். அங்கே அடுப்பங்கரையில் ஒரு கிழவி உட்கார்ந்திருந்தாள்; தலைவிரிந்த வண்ணம் வாடிய முகத்துடனிருக்கும் அவளருகில் அவள் துணி நுனியைப்பிடித்து இழுத்து அழுதுகொண்டு ஒரு பையன் காணப்பட்டான். ஒருவித துர்கந்தம் அவ்வறை முழுவதும் வீசியது. சுற்றிப் பார்க்கையில் இன்னொரு மூலையில் ஒருத்தி தரையில் விழுந்து புரண்டு அலட்டிக்கொண்டிருந்தாள். அவளைப்பார்த்தாலே வியாதியால் வருந்துகிறாள் என்று தெரிந்தது.

கிழவி தலையை மெதுவாய்த் தூக்கி வந்தவனைப் பார்த்தாள்: “உனக்கென்ன வேண்டுமப்பா. இங்கொன்றுமில்லையே” என்று சொன்னாள். அவள் பாஷை முற்றிலும் கிருஷ்ணனுக்குத் தெரியாதென்றாலும் அவள் சொல்வது இன்னவென்று தெரிந்துகொண்டான். “ஜலம்வேண்டும்” என்று தன் வாயைச்சுட்டிக்காட்டினான். “ஜலம்கொண்டு வருவதற்கு இங்கே யொருவருமில்லையே, வேறெங்கே யாவதுபோ” என்றாள் கிழவி; கிருஷ்ணன் தயங்கி நின்றான்.

“இவளைக் கவனிப்பதற்குக்கூட ஒருவருமில்லையா” என்று வியாதியால் வருந்திக்கிடக்கும் அவளைச் சுட்டிக்காட்டினான்.

“இல்லை, என்பிள்ளையும் வாசலில் விழுந்துகிடக்கிறான். என்ன செய்வோம்,” இதற்குள் அழுதுகொண்டிருந்த பையன் இவனை உற்றுப்பார்த்துவிட்டு சாதம் சாதமென்று மறுபடியும் அழத் துடங்கினான். கிருஷ்ணன் மறு கேள்விகேட்பதற்குமுன் வாசலில் விழுந்து கிடந்தவன் எப்படியோ எழுந்து தடம் தடுமாறுகிறவனாய் சுவற்றை மெள்ளப்பிடித்துக்கொண்டு உள்ளே வந்தான்.

“வியாதி, பஞ்சம், நாங்கள் என்னசெய்வோம்.” பையனைச் சுட்டிக்காட்டி “அவனும் பசித்துச் சாகிறான்” என்று அழத்துடங்கினான்.

இவற்றைக்கண்ணுற்ற கிருஷ்ணன் உடனே தன் முதுகிலிருந்த மூட்டையை கீழே இறக்கி முடிச்சுகளைச்சட்டென அவிழ்த்து ஒருபிடி அவலை எடுத்து அம்மனிதனிடம் நீட்டினான்; அவன் அதை வாங்கிக்கொள்ளாமல் பையனையும் கீழேவிழுந்து கிடக்கும் பெண்ணையும் அவர்களுக்கு முதலில் கொடு என்பதுபோல் சுட்டிக்காட்டினதைக்கண்டு அவலை அந்தப்பையனிடம் கொடுத்தான். பையன் அதைவாங்கி ஒரேவாயாய்ப் போட்டுக்கொண்டான். பிறகு கிருஷ்ணன் அந்தப் பெண்ணிற்கும் கொஞ்சம் கொடுத்தான். கிழவிக்கும் ஒருபிடி எடுத்து நீட்டினான். “தொண்டை உலர்ந்து போய்விட்டது. கொஞ்சம் ஜலமிருந்தால்,— நேற்று, அல்லது இன்றுதானோ தெரியவில்லை, ஜலம்கொண்டு வரப்போய் நடக்கமுடியாமல் தள்ளாடிக் கீழே விழுந்துவிட்டேன். குடம் அங்கேயே யிருக்கிறது. யாரேனும் எடுத்துக்கொண்டு போய் விட்டார்களோ என்னமோ” என்று கிழவிசொல்லக் கேட்டு அந்தக்கிணறு இருக்குமிடம் கேட்டறிந்து அங்கேபோய் குடத்தைக் கண்டெடுத்து ஜலம் மொண்டு வந்து அவர்கள் எல்லோருக்கும் கொடுத்தான். தானும் ஒருகை வாரிக்

குடித்தான். பிறகு எல்லோருமாய் அவலைநனைத்து சாப்பிட்டார்கள். அம்மனிதன் மட்டும் "என்னால் [illegible]தச் சாப்பிட முடியாது" என்று சாப்பிடவில்லை.

பிறகு கிருஷ்ணன் கடைக்குப் போய்கொஞ்சம் அரிசி உப்பு புளி முதலியவை வாங்கிவந்து சுள்ளிகளைப் பொறுக்கி அடுப்பு மூட்டி கொஞ்சம் கூழ் காய்ச்சி பட்டினியால் சாகும் அந்தக்குடும்பத்திற்கு ஆகாரம் அளித்தான்.

அவர்களுக்குண்டான பசியில், அந்தப் பையனும் சிறுபெண்ணும் கடைசியில் பாத்திரத்தைக் கூட சுரண்டிச் சாப்பிட்டார்கள். பிறகு ஒருவரை யொருவர் அணைத்துக் கொண்டு எல்லாரும் களைப்பினால் அயர்ந்து தூங்கினார்கள். கிழவியும் அவள் மகனும் தங்கள் வரலாற்றைக் கிருஷ்ணனிடம் தெரிவித்தார்கள்.

"நாங்கள் எப்பொழுதுமே ஏழைகள். ஆகையால் பயிர் தீய்ந்து பஞ்சம் வந்ததும் எங்களுக்குப் போன ஐப்பசிமாதமே சாப்பாட்டிற்குத் தட்டு உண்டாயிற்று. மார்கழிமாதம் முழுமையும்பிச்சையெடுத்து உண்ணவேண்டிவந்தது. ஊரார் முதல் முதலில் கொஞ்சம் கொடுத்து உதவினார்கள். வரவர பிச்சையும் கிடையாதென்றாயிற்று. அவர்கள் தானென்ன செய்வார்கள். தங்களிடம் இருந்தால் தானே கொடுக்க முடியும். எங்களுக்கும் திரும்பத் திரும்பப் போய் கேட்பதற்கு வெட்கமாயிருந்தது. வேலை கிடைக்குமோ என்று தேடித்திரிந்து பார்த்தேன், கிடைக்கவில்லை, "எனக்குமாத்திரம் சாப்பாடு போட்டால் இட்டவேலையெல்லாம் செய்கிறேன்" என்று மற்றவர் அலையும்போது ஒருகுடும்பம் முழுமையும் காப்பாற்றவேண்டிய எனக்கு எப்படி வேலை கிட்டும். ஒருநாள் வேலை கிடைத்தாலும் மறுபடி பத்துநாள் வேலையின்றி அலையவேண்டியிருந்தது. இந்தப் பெண்ணும் கிழவியும் அயலூருக்குப் போய் பிச்சையெடுத்து வந்தார்கள். அப்படியும் ஒன்றும் கிடைக்கவில்லை. எப்படியாவது மறுபடியும் அறுவடையாகும் வரை இழுத்து கிடந்தோமானால் எல்லாம் சரியாய் விடும் என்று இருந்தேன். அதற்குள் இந்த வியாதி வந்து வியாபித்துக்கொண்டது. ஏதாவது ஒருநாளைக்குத் தின்ன கிடைத்துவிட்டால் மூன்று நாள் மறுபடி சுத்தப்பட்டினிதான். பசியின் கொடுமையால் புல்லைக்கூட தின்னத் துவக்கினோம். அதினால்தானோ என்னமோ, இந்தப்பெண்ணுக்கு வியாதியுண்டாயிற்று. பிறகு எனக்கும் அதுபோலாயிற்று. நிற்கக்கூட முடியவில்லை," என்றான் அந்த மனிதன்.

"நானும் என்னாலானவரையில் பார்த்தேன். முடியவில்லை. ஆகாரமின்றி சோர்வுண்டாயிற்று. அந்தப்பெண்ணும் சோர்ந்து போய்விட்டாள். அண்டைவீட்டாரைப்போய்ப் பாரென்று சொன்னேன். அவளால் போகமுடியவில்லை. அந்த மூலையிலேயே விழுந்து கிடக்கிறாள். இரண்டுநாளுக்குமுன் பக்கத்து வீட்டுக்காரி எட்டிப்பார்த்தாள். நாங்கள் படும் துயரத்தைக்கண்டு சகியாமல் திரும்பிப்போய்விட்டாள். அவள் குழந்தைகளுக்கும் ஆகாரமில்லையென்று திண்டாடுகிறாள். அவள்புருஷன் எங்கேயோ வெளியூருக்குப்போய்விட்டான். என்ன செய்வாள் பாவம்! நாங்கள் கதியொன்றுமில்லையென்று யமன் வரும் வேளையை எதிர்பார்த்து விழுந்துகிடந்தோம்" என்றாள் கிழவி.

இவற்றைக்கேட்ட கிருஷ்ணன் அதிக துக்கமடைந்து தன் கல்பனைஎட்டிப் பிடித்து அவனுடன் யாத்திரை செய்யவேண்டுமென்ற எண்ணத்தை மறந்து இராப்பொழுதை அங்கேயே அவர்களுடன் கழித்தான். பிறகு காலையிலெழுந்து உன் சொந்த வீட்டிலிருப்பவன்போல் வீட்டு வேலைகளைச்செய்து சமைக்கவும் ஆரம்பித்தான்.

அந்தச் சிறுமி பக்கத்து வீட்டிற்குப்போய் பாத்திரங்கள் கடனாக வாங்கிவந்தாள். தங்களுடைய பாத்திரம் துணி மற்ற சாமான் யாவையும் முன்பே விற்றுச்சாப்பிட்டுவிட்டார்கள் அல்லவா? அவசியமென்றே சிலசாமான்களை கிருஷ்ணன் விலைகொடுத்து வாங்கிவந்தான்.

இப்படியாக ஒருநாள், இரண்டு நாள் மூன்று நாளாயிற்று. பையனுக்கும் தேகத்தில் பலம் வந்தது. கிருஷ்ணன் ஒழிந்த சமயத்தில் அவனுடன் விளையாடுவான். அந்தப்பெண்ணும் உடம்பு தெளிந்து வீட்டு வேலைகளைச் செய்யத்துடங்கினாள். அவர்கள் கிருஷ்ணனை "தாத்தா, தாத்தா" என்று அழைத்தனர்.

கிழவிக்கும் உடம்பு சரியாயிற்று. அவள் மகனும் சுவற்றை மெள்ளப் பிடித்துக் கொண்டு நடக்க ஆரம்பித்தான். "சரி; நான் இனி நாளைக்கு புறப்படலாம்" என்று கிருஷ்ணன் இரவில் படுத்திருக்கும்போது யோசித்தான்; மறுநாள் துவாதசி. பாரணைபண்ணிவிட்டு சாயங்காலம் போகலாமென்று அரிசி பால் எண்ணெய் முதலியனவாங்கிக் கொடுத்து சமைக்கச்செய்து எல்லோரும் சாப்பிட்டானபிறகு வாசல் திண்ணையில் வந்துட்கார்ந்து சற்று கண்ணை மூடினான்.

அப்போது வீட்டுக்காரன் தன் தாயாரிடம் "என்னசெய்வோம்; நிலத்தை அடமானம் வாங்கியிருக்கும் பண்ணையார் நாம் பயிர் செய்து அறுப்பு அறுக்கக்கூடாதென்கிறார்" என்று சொல்வது அவன் காதில் விழுந்தது.

"பாவம் என்ன செய்வார்கள். மற்றவர் உழுது பயிர் செய்து நெல் கொண்டு வரும்போது இவர்கள் மட்டும் இப்படித்தானே கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பார்கள். நான்போன பிறகு, முன்போல் வியாதியாலும் பஞ்சத்தாலும் வருந்தி விழுந்து கிடப்பார்கள் என்று தோன்றவே "இன்று சாயங்காலம் போகவேண்டாம், நாளை யிருந்து பார்ப்போமென்று யோசித்தான். அன்றிரவு தூக்கம் வரவில்லை. கையிலுள்ள பணமும் செலவழிந்து நாட்களும் ஆகின்றனவே என்றவருத்தம் ஒருபக்கம், இவர்கள் மீதுள்ள அன்பு மற்றோர்பக்கம், "இதற்கு ஒப்பு கிடையாது போலிருக்கிறதே. முதலில் கொஞ்சம் அவல் என்று ஆரம்பித்தேன்; எங்கே கொண்டுவந்து விட்டது. நிலத்தைத் திருப்பிக் கொடுத்தும், அப்புறம் ஒரு கறவைப் பசு, உரம் அடிக்கவண்டிமாடு. பேஷ், கிருஷ்ணா! உனக்கு புத்திமழுங்கிவிட்டதா?" என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டு சிரித்தான். "எண்ணியெண்ணி முடியவில்லை. புறப்படவேண்டியது அவசியமாயிற்றே? இப்படி மனம் பின்னிழுக்கின்றதே" என்று யோசித்தவண்ணம் எழுந்துட்கார்ந்து தலைக்குயரமாய் வைத்திருந்த மூட்டையினின்று பொடிப்பட்டையை யெடுத்து ஒருசிடிகை பொடி போட்டுக் கொண்டான், புத்தி தெளியுமென்று.

விடியும் சமயமாயிற்று, கோழிகூவிற்று. சற்று கண்மூடினவன் யாரோ தன்னை எழுப்புவதாயும், உடனே மூட்டையை முதுகிலிட்டுப் புறப்படுவது போலவும் அப்போது வேலியில் துணிமாட்டிக் கொண்டதுபோலவும் அதைப்பிரிப்பதற்கு திரும்பிப்பார்க்கையில் வேலியில் மாட்டிக்கொள்ளவில்லை அந்தச் சிறுவனும் சிறுமியுமாய் தன்துணியின் நுனியைப் பிடித்திழுத்து "தாத்தா, சாதம்" என்பது போலவும் அவர்களுக்கு பின்புறம் அந்தக்கிழவியும் அவள் மகனும் நிற்பதுபோலவும் காணவே கண்விழித்து திடுக்கிட்டு எழுந்தான்.

"ஆம், அந்த நிலத்தைத் திருப்பிக்கொடுத்து ஒருமாடும் வாங்கிக்கொடுக்க வேண்டும். அறுப்புக் காலம்வரை வேண்டிய அரிசியையும் வாங்கிக் கொடுக்கவேண்டும். இந்தக்குழந்தைகளுக்காக ஒரு பசுவும் வேண்டும். சுவாமியைத்தேடி அங்கே

போய் அந்தர்யாமியான பகவான் இங்கேயிருப்பதை மறந்துவிடுவதா" என்ற எண்ணம் அவன் மனதில் உதித்தது.

மறுபடியும் சூரியன் உதிக்கும்வரை படுக்கையில் படுத்து அயர்ந்து தூங்கினான். மறுநாள் அந்தக் குடியானவனைக்கூட அழைத்துச்சென்று பண்ணையாருக்குச் சேரவேண்டிய பொருளைக் கொடுத்து நிலத்தை மீட்டுக்கொடுத்தான். வரும்போது கதிர் அறுக்கும் அறிவாள் ஒன்று வாங்கினான். பிறகு சாயங்காலம் சந்தைக்குப்போய் உழவு மாடு வாங்கி ஓட்டிக்கொண்டு வந்தான். வரும்போது ஒரு மூட்டை அரிசி வாங்கி அதின்மேல் போட்டுக்கொண்டுவந்தான். அன்றிரவு கிழவி தன் மகனிடம் "பார்த்தாயா, அப்பா, இவர் கருணையை ஏதோ ஜலம்வேண்டுமென்று வந்தார். நம்முடைய துக்கத்தைக்கண்டு அப்படியே இருந்துவிட்டார். இன்று என்னவெல்லாம் செய்தார். அவரைப்பார்த்தால் தெய்வமே நம்மைக்காக்க இப்படியொரு உருவெடுத்து வந்ததோ என்று தோன்றுகிறது" என்று சொன்னது அவன் காதில் விழவே, பசுநாளைக்கு வாங்கலாமென்றிருந்த கிருஷ்ணன் அன்றிரவே எல்லோரும் படுத்து உறங்கும்போது ஒருவருக்கும் தெரியாமல் தன் மூட்டையையெடுத்துக்கொண்டு இராமனைப் பின்தொடர்ந்துபோகப் புறப்பட்டான்.

(தொடரும்)

"தமிழ் உலகு."

"தமிழ் உலகு" என்று பெயர் வாய்ந்த வாரப் பத்திரிகை ஒன்று சென்னையில் ஆரம்பமாகியிருக்கிறதாகச் சின்னாள் முன் அறிவித்தோம். பிரதிவாரமும் வரும் அதைத் தொடர்ச்சியாகப்படித்துப் பார்த்ததில், தமிழ் மக்களுடைய அறிவைப்பல துறைகளிலும் வளர்க்க அது முயன்று வருகிறதென்பதில் சந்தேகமில்லை. அதன் ஆசிரியராகிய ஸ்ரீமான் எஸ். பட்டாபிராமன் ஆங்கிலம் கற்று எம். ஏ. பட்டம் பெற்றிருப்பதுடன், தமிழ் மொழியில் தேர்ச்சி பெற்றவர்; உலக வியவகாரங்களையும் நவீன சாஸ்திரங்களையும் பல வகைச் சரித்திரங்களையும் தமிழர் அறிந்து உயர்வு பெற வேண்டுமென்ற ஆர்வங்கொண்டவர். அவரை ஆசிரியராகக் கொண்ட "தமிழ் உலகு" தனது லட்சியங்கள் நிறைவேறத்தக்க வழியில் ஊழியம் செய்யுமென்பது நிச்சயம். இது வரையில் வெளி வந்துள்ள மூன்று வாரப் பத்திரிகைகளிலும் சில வியாசங்களைச் சிறப்பாகக் குறிப்பிடுவது தகும். பூமியின் பிறப்பு, நேஷன், மீரா பாய் சரித்திரம் ஆகியவைகளைப் பற்றிய வியாசங்கள் புது அறிவைத் தமிழருக்கு அவர்கள் அறியக் கூடிய நடையில் புகட்டுவனவாயிருக்கின்றன. இந்தப் பத்திரிகை தழைத்து தனது கருத்து நிறைவேறப் பெறுமாறு கடவுள் கருணை பொழிய வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

சுதேசமித்திரன்.

புத்தக விளம்பரங்கள்.

சுதேசமித்திரன் புத்தகசாலை.

உதயலன்.
என்கிற கொற்கைச் சிங்களவன்.
ஷேக்ஸ்பியர் மகாகவி ஆங்கிலபாஷையில் எழுதியுள்ள "ஒதெல்லோ என்கிற வெனிஸ் மேரியன்" என்னும் ஓர் அருமையானநாடகம். அ. மாதவையா அவர்கள் மொழி பெயர்த்தமைத்தது.
விலை அணா 12.

பத்மாவதி சரித்திரம்.
ஸ்ரீமான் அ. மாதவய்யர், பி.ஏ. எழுதிய அருமையான நாவல். புதிய பதிப்பு 10. படங்களுடன் கூடியது. இந்நூல் அலங்காரமாய் அநேக பழமொழிகளை அணிந்து சில மதுரமான கவிகளை உள்ளடக்கி, சிறுவர் சிறுமிகளும் எளிதிற் படித்தறியும்படியான தமிழ் நடையில் உள்ளது.
விலை ரூ. 2.

வர்த்தகயுக்தி.
வியாபார சம்பந்தமான விஷயங்கள் கொண்டது. ஒவ்வொரு தொழிலாளியும் அவசியம் படிக்க வேண்டிய நூல். இதனை மெச்சிப் புகழாத பத்திரிகைகள் கிடையா. முதற் பதிப்பு விளம்பரமின்றி விற்பனை, இரண்டாம் பதிப்பு பத்திரிகையில் விளம்பரம் செய்த ஒரு வாரத்துக்குள் விற்பனை. இது நான்காம் பதிப்பு. விலை அணா 6.

சுதாமாலிகா.
இது ஒரு கதைக் களஞ்சியம்.
வி. சுப்பிரமணிய பாரதியார் எழுதிய விநோதக் கதைகளும், விசித்திரங்களும், பொதிந்து கிடக்கின்றன. கதா விநோதம், 33-விஷயங்கள் அடங்கியிருக்கின்றன, விலை ரூபா 1.

பாமாலை.
இராமலிங்க ஸ்வாமிகள், மாணிகக வாசகர் முதலியோர் திருவாய்மலர்ந்த சில அற்புத பாடல்களை, ஒரு பெரியார் தொகுத்தபடி அச்சிடப்பட்டிருக்கிறது. கோயம்பத்தூர், திருநெல்வேலி ஜில்லாக்களில் பிரதிவாரசந்தோறும் படிக்கும் பக்த சிரோன்மணிகளுக்கு இந்நூல் மிகவும் உபயோகமானது. விலை அணா 4.

சிறைவாசஞ் செய்யும்.
கிருஷ்ணஸ்வாமி. சர்மா

அவர்களால் எழுதப்பட்டது.	ரூ.	அ.
மகாத்மாகாந்தியின் குரு டால்ஸ்டாய்	0	4
பண்டித மோதிலால் நேரு	0	2
மகாத்மா காந்தி	1	8
சித்தரஞ்சன தாஸ்	0	12
முஹம்மத் அலி, ஷவுகத் அலி	1	0
ஸ்வராஜ்யம்	0	8
லாலாலஜபதிராய்	0	8
சிவாஜி	1	0

திக்கற்ற இருகுழந்தைகள்.
இந்த நாவல் பெரியதாயும் வாசிக்கும் போது மனக்கிளர்ச்சி யுண்டாக்க கூடிய தாயுமுளது. படிக்கச்சுவை மிகுந்து மகளிர் வாழ்க்கையிற் படிப்போர் யாவருக்கும் அநுதாபமும் ஒற்றுமையுணர்ச்சியும் விளையும்படி செய்கின்றது. இது யாவருக்கும் விளங்கும் எளிய நடையை உடையது. படிக்கப் படிக்க மேன்மேல் மனதைக் கவரும் இனிய கதைப்போக்கையும் நன்கறிந்து கொள்ளலாம். விலை ரூ. 1-8.

மானேஜர், சுதேசமித்திரன்,
சென்னை.

பட்டு பீதாம்பர கம்பெனி, காசி

தந்தி விலாசம்: "ஆதிமூர்த்தி" பனாரஸ்.

பரிசுத்தமான சுதேச பட்டினுல், சுதேச வெள்ளி, தங்க சரிகையால் நெய்யப்பட்ட சேலைகள், வேஷ்டிகள், துப்பட்டாக்கள் சகல தினுசுகளும் தயாராக இருக்கின்றன. அவைகளின் விபரகேடலாக்கு ஆர்டர் செய்தால் அனுப்புகிறோம். கேட்லாக் இனும்.

SILK PITAMBER Co.,
BENARES CITY.
Telegrams : "Adimoorthi" Benares.

சுதேசியமானது! உபயோகமுள்ளது!!

அமிர்தாஞ்சனம்

எல்லா நோய்களுக்கும் சித்தௌஷதம்

தலைநோய், முதுகுநோய், இடுப்புவலி, மார்ச்சளி, சைத்தியம், கீல்பிடிப்பு, இருமல், ஒத்தைத் தலைநோய், வீக்கம், சுளுக்கு முதலான நோய்களுக்கு திவ்யாமிருதம்.

டப்பி 1-க்கு 0—10—0. டஜன் 1-க்கு 6—0—0.

படைமருந்து	பற்பொடி	மோஹினி தைலம்
டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு
0—6—0	0—2—0	0—12—0

அமிர்தாஞ்சனம் டிபோ, மதராஸ், பொம்பாய்.

தமிழ் உலகு

ADVERTISEMENT RATES
(PER INSERTION)

Per 1	Page	Rs. 16
Per ½	Page	Rs. 9
Per ¼	Page	Rs. 5

Apply to
The Manager,
'THE TAMIL WORLD'
MYLAPORE.

தமிழ் உலகு

சந்தா விகிதங்கள்

(தபால் கூலி உள்பட)

வருஷம் 1-க்கு ரூபா 5.
வருஷம் ½-க்கு ரூபா 3.

மானேஜர்,
'தமிழ் உலகு'
மைலாப்பூர்.

பண்டித. கே. ஏ. வெங்கடாசல சாஸ்திரிகளின்

மதனானந்த மோதகம்

உலக வாழ்க்கைக்கு இன்றியமையாத இன்பம் தரும் தாதுவிருத்தி லேஹ்யம். இது ஜனனேந்திரிய சம்பந்தமான எல்லாப்பிணிகளையும் போக்கி வலுவைக் கொடுக்கும். விலை டின் 1-க்கு ரூ. 5. (வி. பி. தனியே)

மானேஜர்: ஆயுர்வேத மந்திரம், மைலாப்பூர், சென்னை.

சென்னை ஜார்ஜ் டவுன் நெ. 1, மக்லீன் தெருவு, எவ்வரிமான்ஸ் அச்சுக்கூடத்தில் D. சுந்தரவரதனல் அச்சிடப்பட்டு, சென்னை மைலாப்பூர், பசுபதி அக்கிரஹாரம், நெ. 16, 'தமிழ் உலகு' கார்யாலயத்தில் R. பஞ்சாபகேசையரால் பிரசுரிக்கப்பட்டது.